2012 பிப்ரவரி 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

43—

சீரமைத்தல்

***5582—திரு. கே. குப்பன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, திருச்சினங்குப்பத்திலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.*

முற்பகல் 10—50

திரு. கே. குப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ சமுதாய மக்களுடைய ஒப்பற்றத் தலைவியாக இருக்கக்கூடிய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என்னுடைய திருவொற்றியூர் தொகுதிக்குட்பட்ட திருச்சினங்குப்பத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை முதலமைச்சராக இருந்த காலத்தில் 1993 ஆம் ஆண்டே திருச்சினங்குப்பத்தில் இரண்டு கோடியே முப்பத்தேழு இலட்சம் ரூபாய் செலவில் 492 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டிக்கொடுத்தார்கள். அவை கட்டப்பட்டு 19 ஆண்டுக் காலம்*

ஆகிவிட்ட காரணத்தினால், அந்தக் குடியிருப்புகள் இன்றைக்குச் சிதிலமடைந்து, இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில், அக்குடியிருப்பில் இருக்கின்ற தாய்மார்களும், குழந்தைகளும் குறிப்பாகப் பெரியவர்களும் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைக்குச் செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், மீன் வளத் துறைச் செயலாளர் அவர்களையும், மீன் வளத் துறை ஆணையர் அவர்களையும் நேரடியாக திருச்சினாங்குப்பம் கிராமத்திற்கு அழைத்துச் சென்றேன். அந்தக் குடியிருப்புகள் குடியிருக்க ஏதுவாக இருக்குமா, இல்லை சீரமைத்து புதிதாகக் கட்டி கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரிலே பார்வையிட்டிருக்கின்றார்கள். அக்குடியிருப்பில் மக்கள் இரவில் வீட்டின் உள்ளே படுக்கக்கூட முடியாமல், வெளியில் படுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே அதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கட்டிக் கொடுக்கப்பட்ட அந்தக் குடியிருப்புகளின் நிலைமையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, சீரமைத்துத் தருவதாகச் சொன்னார்கள். திருச்சினாங்குப்பம் கிராமத்திலுள்ள குடியிருப்புகளை உடனடியாகச் சரிசெய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதி, திருச்சினாங்குப்பத்திலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சீரமைப்பது தொடர்பாக, அக்குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியக் கட்டுமானப் பொறியாளருடன், மீன்பிடித் துறைமுகத் திட்ட வட்டக் கண்காணிப்புப் பொறியாளரும், மீன் வளத் துறை அதிகாரிகளும் 11–8–2011 அன்று நேரில் சென்று ஆய்வுகள் மேற்கொண்டனர். ஆய்வின்போது அந்த அடுக்குமாடிக் குடியிருப்புகள் கடலுக்கு மிக அருகில் இருப்பதாலும், எண்ணூர்

விரைவு சாலையில் செல்லும் கனரக வாகனங்களால் ஏற்படும் அதிர்வுகளாலும் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. 2006–இல் புனரமைப்புப் பணி நடைபெற்ற பின்பும் குடியிருப்புகளின் மேல்தளப் பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கு வடிகால் பகுதியில் ஏற்பட்டுள்ள கழிவு நீர்த் தேக்கத்தினாலும், அடுக்குமாடிக் குடியிருப்பின் தரைத் தளமும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் உப்பங்காற்றினால் கான்கிரீட் கம்பிகள் துருப்பிடித்து, சேதம் அடைந்து, உதிரும் நிலையில் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை அரசுச் செயலர் அவர்கள் உத்தரவின் பேரில், 2–11–2011 அன்று மீன்பிடித் துறைமுகத் திட்ட வட்டத் தலைமைப் பொறியாளர் அவர்கள் மீண்டும் ஆய்வு செய்து, பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்க இயலாது என்றும், புதியதாக அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்ட வேண்டுமென்றும் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளார். இவ்வாய்விற்குப் பின்பும் மீன்பிடித் துறைமுகத் திட்ட வட்டத் தலைமைப் பொறியாளர் அறிக்கையின் மீது மீன் துறை இயக்குனர் அவர்கள், இவ்வடுக்குமாடி 492 குடியிருப்புகளைப் புதிதாகக் கட்டுவதற்கு, ரூ.14.50 கோடி செலவில் கருத்துருவானது, 2–2–2012 அன்று அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டமானது, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று விரைவில் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிளங்குப்பம் கிராமத்தில் வீடுகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கு நன்றியைத் தெரிவித்து அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.